(Under Section.173 BNSS)

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.வி.மு.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109484

1. District : மாவட்டம் Coimbatore | PS: காவல்நிலையம் VAPC | Year: ஆண்டு 2025 | FIR No.: மு.த.அ. எண் 10/2025/AC/CB | Date: நாள் 17.06.2025

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 | Sections பிரிவுகள்: 7(a)

   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 12.06.2025 | Date to : நாள் வரை 16.06.2025

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் @ 14.00hrs | Time to : நேரம் வரை @ 12.00hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.06.2025 | Time : நேரம் 10.30 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் CD.Vol.II | Time : நேரம் 10.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed in Tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் at about 35 Km, South East

   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி O/o. Executive Engineer, O&M, Somanur, Coimbatore Electricity Distribution Circle/South TANGEDCO.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S.: | District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M.K. Senthil Prabhu | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் R. Kannahaan

   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 36/2025 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation தொழில் Software Engineer | (g) Address முகவரி D.No.354, Raman Street, Samundipuram West, Gandhi Nagar Post, Tiruppur District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. K.R. Sabairajan, Executive Engineer, O&M, Somanur, Coimbatore Electricity Distribution Circle/South, TANGEDCO.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted: Before the Hon'ble Special Judge, Special Court for cases under the Prevention of Corruption Act. Coimbatore.

Separate Sheets herewith enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

17.06.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

17/06/2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

17.06.2025 @ 11.45 hrs

Name: பெயர் R. EZHILARASI
Rank: நிலை Inspector of Police, No. எண்
Vigilance and Anti-Corruption
Coimbatore.
17.06.2025.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்கள் முன்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.10/2025/ AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கை வரிசை எண்.8109484-ன் தொடர்ச்சி.

இன்று 17.06.2025-ம் தேதி செவ்வாய்கிழமை காலை 10.30 மணிக்கு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, திருப்பூர் மாவட்டம், காந்திநகர் அஞ்சல், சாமுண்டிபுரம் மேற்கு, ராமன் வீதியை சேர்ந்த திரு.கருணாகரன் என்பவரது மகன் திரு.செந்தில்பிரபு என்பவர் கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகம் ஆஜராகி கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்து, புகார் சம்மந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் சோமனூர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், கோவை மின்பகிர்மான வட்டம்/தெற்கு செயற்பொறியாளராக பணிபுரிந்து வரும் திரு.K.R.சபரிராஜன் என்பவர், புகார்தாரரின் அப்பா பெயரில் நீலம்பூர் கிராமத்தில் அமைந்துள்ள விவசாய பூமிக்குள் இருக்கும் மின் கம்பத்தை மாற்றி அமைப்பதற்கான Estimate தொகையை Sanction செய்வதற்கு ரூ.20,000/- லஞ்சம் கேட்டிருப்பது தெரியவந்தது. மேலும் புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டதில் எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் எதுவுமில்லை என்பதும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 17.06.2025-ம் தேதி 11.00 மணி முதல் 11.30 மணி வரை கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.10/2025/AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as

amended in 2018-ன் படி மேற்படி எதிரி திரு.K.R.சபரிராஜன் என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரர் அளித்த புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புனர்: M.K.செந்தில்பிரபு, வயது 36, த/பெ.R.கருணாகரன், க.எண்.354, ராமன் வீதி, சாமுண்டிபுரம் மேற்கு, காந்திநகர் (அஞ்சல்), திருப்பூர் மாவட்டம். பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, கோயம்புத்தூர் மாவட்டம். அய்யா/அம்மா, நான் திருப்பூர் மாவட்டம், சாமுண்டிபுரம் மேற்கு, ராமன் வீதியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் பெங்களூர், Manayata Tech Park-ல் அமைந்துள்ள HME India Global Private Ltd., என்ற IT நிறுவனத்தில் Staff Software Engineer-ஆக வேலை பார்த்து வருகிறேன். எனது அப்பா திரு.கருணாகரன் அவர்கள் விவசாயம் பார்த்து வருகிறார். அவருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்தான சுமார் 99¾ சென்ட் அளவுள்ள விவசாய நிலமானது கோயம்புத்தூர் மாவட்டம் முதலிபாளையம், நீலம்பூர் கிராமம், க.ச.எண்.159 1B-ல் எனது அப்பா பெயரில் உள்ளது. அதில் தென்னம்பிள்ளை வைக்க முடிவு செய்தோம். ஆனால் அந்த நிலத்திற்கு நடுவில் உள்ள ஒரு மின்கம்பத்திலிருந்து நீலம்பூர் மின் வாரியத்திற்குட்பட்ட குறைந்த மின்னழுத்த கம்பிகள் (Low Tension) செல்கின்றன. எனவே அந்த மின் கம்பத்தினை அங்கிருந்து இடமாற்றம் செய்து எங்களது நிலத்திற்கு ஓரத்தில் மாற்றி அமைப்பதற்காக வேண்டி கடந்த 03.05.2025-ம் தேதி நீலம்பூர் EB அலுவலகத்திற்கு நானும் எனது அப்பாவும் நேரில் சென்று அங்கிருந்த AE அவர்களை சந்தித்து மின் கம்பம் மாற்றி அமைப்பது குறித்து விசாரித்தபோது அவர் அதற்கு ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும் என்றும், Line Inspector-ஐ சந்திக்கும்படியும் தெரிவித்தார். நாங்கள் இருவரும் Line Inspector அவர்களை சந்தித்தோம். அப்போது அவர் Xerox கடைக்கு சென்று உரிய ஆவண நகல்கள் மற்றும் கம்பத்தை எந்த இடத்திலிருந்து எந்த இடத்திற்கு மாற்றி அமைக்க வேண்டும் என்பதை Rough-ஆக வரைந்து அதையும் சேர்த்து ஆன்லைனில் விண்ணப்பிக்குமாறு தெரிவித்தார். எனவே அன்றைய தினமே நானும் எனது அப்பாவும் அருகிலிருந்த Xerox கடைக்கு சென்று எனது அப்பா

பெயரிலுள்ள பத்திர நகல், பட்டா, சிட்டா மற்றும் FMB வரைபடத்துடன், Rough-ஆக வரைந்த வரைபடம் ஆகியவற்றை கொடுத்து ரூ.1,500/- விண்ணப்பத்தை ஆன்லையில் பதிவு செய்வதற்காக எனது அம்மாவின் G.Pay கணக்கிலிருந்து Xerox கடைக்கு அனுப்பி எனது அப்பாவின் பெயரில் ஆன்லைனில் விண்ணப்பம் செய்தோம். அதன்பின்னர் கடந்த 07.05.2025-ம் தேதி எனது அப்பாவின் செல் நம்பர் 9952485635-க்கு அவரது விண்ணப்பம் பதிவு செய்ததற்கான Application Ref.No.200032900525609 என்றும், அதை பதிவு செய்வதற்காக கட்டணம் ரூ.215/-ஐ 15 நாட்களுக்குள் செலுத்துமாறும் SMS மற்றும் அதில் ஒரு Link-ம் வந்தது. அந்த Link-ன் மூலம் அன்றையதினமே ரூ.215/-ஐ செலுத்தினேன். அதன்பிறகு மே மாதம் இரண்டாவது வாரத்தில் Line Inspector திரு.கணேசன் என்பவர் எனது அப்பாவின் செல்போனில் அழைத்து எங்களது இடத்தை ஆய்வு செய்ய வரப்போவதாக தகவல் தெரிவித்து எங்களது நிலத்திற்கு வந்து ஆய்வு மேற்கொண்டார். அப்போது எனது அப்பாவும் அவருடன் இருந்தார். நிலத்தை அளந்து ஆய்வு முடித்த பின்னர் Line Inspector திரு.கணேசன் அவர்கள் எனது அப்பாவிடம் கம்பத்தை மாற்றி அமைப்பதற்கான மொத்த Estimation தொகை ரூ.50,000/-க்கு மேல் ஆகும் என்றும், அதற்கான Estimation-ஐ தயார் செய்து EE அலுவலகத்திற்கு அனுப்பிவிடுவோம் என்றும், அதற்கு EE அவர்கள்தான் ஒப்புதல் அளிப்பார் என்றும், அந்த ஒப்புதல் பெற்ற பின்புதான் மின் கம்பத்தை மாற்றி அமைக்க முடியும் என்றும், EE அலுவலகத்திற்கு சென்று பார்க்கும்படியும் தெரிவித்தார். இதற்கிடையில் எனது அப்பாவிற்கு உடல் நிலை சரியில்லாததாலும், எனக்கும் வேலை இருந்ததாலும் நாங்கள் EE அலுவலகத்திற்கு செல்லவில்லை. இந்நிலையில் 09.06.2025-ம் தேதி மாலை சுமார் 5.30 மணியளவில் 6385370477 என்ற எண்ணிலிருந்து எனது அப்பாவின் செல் நம்பர் 9952485635-க்கு பேசிய நபர் தான் சோமனூர் EE என்றும், எனது அப்பாவின் விண்ணப்ப விபரத்தையும், எங்களது இடத்தை பார்வையிட்ட விபரத்தையும் தெரிவித்து எனது அப்பாவை சோமனூர் EB

அலுவலகத்திற்கு நேரில் வந்து சந்திக்கும்படி தெரிவித்துள்ளார். அதற்கு எனது அப்பா அவருக்கு உடல்நிலை சரியில்லாததால் தன்னால் வரஇயலாது என்றும், அடுத்தநாள் வருவதாக சொல்லியுள்ளார். அதற்கு EE அவர்கள் இரண்டு நாட்களில் அவரே அழைப்பதாக தெரிவித்த விபரத்தை எனது அப்பா என்னிடம் கூறினார். அதன்பிறகு மீண்டும் கடந்த 12.06.2025-ம் தேதி மதியம் சுமார் 2.00 மணியளவில் சோமனூர் EE அவர்கள் எனது அப்பாவிற்கு போன் செய்து அவரது அலுவலகத்திற்கு வரும்படியும், தன்னை நேரில் சந்தித்து கொஞ்சம் கவனிக்க வேண்டியுள்ளது என்றும் அவரது அலுவலகத்திற்கு வரும்படியும் சொல்லியுள்ளார். ஆனால் அப்பாவின் உடல்நிலை கருத்தில் கொண்டு நாங்கள் அங்கு செல்லவில்லை. அதன்பின்னர் 16.06.2025-ம் தேதி காலை சுமார் 9.45 மணியளவில் எனது அப்பா சோமனூர் EE அவர்களுக்கு போன் செய்தபோது அவர் போனை எடுக்கவில்லை. சிறிது நேரம் கழித்து சோமனூர் EE அவர்கள் எனது அப்பாவின் செல்நம்பருக்கு அழைத்தபோது எனது அப்பா அலுவலகத்திற்கு வரச்சொல்லியிருந்தீங்க அதனால் தான் கூப்பிட்டதாக தெரிவித்தார். அதற்கு EE அவர்கள் மதியம் 12.00 மணிக்கு சோமனூர் அலுவலகத்திற்கு வந்துவிடும்படி தெரிவித்ததால், நானும் எனது அப்பாவும் அவர் சொன்னபடி சோமனூர் EB அலுவலகம் சென்று EE திரு.சபரிராஜன் அவர்களை நேரில் சந்தித்து எங்களது நிலத்தில் உள்ள மின் கம்பத்தை மாற்றி அமைப்பது சம்மந்தமான விண்ணப்பம் குறித்து கேட்டோம். அதற்கு அவர் சிறிது நேரம் பேசிவிட்டு, AE அலுவலகத்தில் Estimation ஒரு லட்சத்திற்கு மேல் போட்டுகொடுத்துள்ளதாகவும், இதற்கு மேல் குறைக்க முடியாது என்றும், அதே Estimation தொகைக்கு Sanction பண்ணிகொடுப்பதாகவும், அதற்கு தனியாக தனக்கு ரூ.20,000/- தர வேண்டும் என்றும் சொன்னார். மேலும் தான் ஒப்புதல் கொடுத்த பிறகு Estimation தொகையை ஒரு வாரம் கழித்து ஆன்லைனில் செலுத்திவிடுங்கள் என்றும் சொன்னார். அதற்கு நான் உங்களுக்கு அவ்வளவு தொகை ஆகுமா சார் என்று கேட்டேன். அதற்கு அவர் தான் அதிகமாக ஒன்னும் கேட்கவில்லை என்றும் பார்த்து பண்ணுங்க என்றும் சொன்னார். உடனே நான்

எனது அப்பாவை அனுப்பிவைக்கட்டுமா சார் என்று கேட்டேன். அதற்கு அவர் அப்பாவையெல்லாம் அனுப்ப வேண்டாம் நீங்களே நாளைக்கு எனக்கு போன் பண்ணிட்டு வாங்க என்று சொன்னார். வீட்டுக்கு வந்த பின்பு நானும் எனது அப்பாவும் கலந்து ஆலோசித்ததில், எங்களது நிலத்தில் உள்ள மின் கம்பத்தை மாற்றி அமைப்பதற்கு ஆகும் அரசாங்க செலவிற்கான மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்க ரூ.20,000/-த்தை லஞ்சம் கேட்கும் சோமனூர் EE திரு.சபரிராஜன் அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க எங்களுக்கு விருப்பம் இல்லை. எனவே சோமனூர் EE திரு.சபரிராஜன் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் எனது அப்பாவிற்கு 72 வயது ஆகிவிட்டதாலும், அவருக்கு தற்சமயம் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாலும் அவர் சார்பாக நான் இந்த புகாரை கொடுக்கிறேன். இப்படிக்கு, sd.XXXXX 17.06.2025 (SenthilPrabhu.M.K.). Respected Madam, Received the complaint on 17.06.2025 at about 10.30 hrs. sd.XXXXX, 17/06/2025, Inspr., V&AC, CBE. Respected Madam, After conducting a Discreet Enquiry, a case in Coimbatore V&AC Cr.No.10/2025/AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered by me on 17.06.2025 between 11.00 hrs and 11.30hrs. sd.XXXXX, 17/06/2025, Inspr., V&AC, CBE. இம்முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

(R.எழிலரசி) 17/06/2025

காவல் ஆய்வாளர்,

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,

கோயம்புத்தூர்.